# Annai Hajira Women's College

## Melapalayam, Tirunelveli-05

(A Unit of As-Sathiq Educational Society)

(Affiliated to Manonmaniam Sundaranar University)



# NEWSPAPER CLIPPINGS

# 2019-2020

# THE HINDU 07.08.2019

# ENGAGEMENTS

## TIRUNELVELI

**Annai Hajira Women's College:** Lecture on 'The power and purpose of literature' by Sayed K. Khaanthar, Director (Education), Star Educational Management Systems, Dubai, United Arab Emirates, S.K. Syed Ahamed, president, As-Sathiq Educational Society, presides, A. Abdul Kader, Director, Self-Financing Courses, Sadakkathullah Appa College, Palayamkottai, felicitates, seminar hall, college premises, 11 a.m. to 1 p.m.

DINATHANTHI 13.09.2019



# கல்லூரி விழா

நெல்லை, செப்.13–

மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரி, நெல்லை ஸ்ரீசாரதா மகளிர் கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் மாணவிகளை இடம் மாற்றிக் கொள்வதன் மூலம் வகுப்பு பரிமாற்ற விழாவை நடத்தினர். அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியில் நடந்த நிகழ்ச்சிக்கு, கல்லூரி தலைவர் எஸ்.கே. செய்யது அகமது தலைமை தாங்கினார். தாளாளர் எஸ்.கே.குதா முகமது முன்னிலை வகித்தார். பொருளாளர் ஓ.கே.ஜாபர் சாதிக் வரவேற்று பேசினார். முதல்வர் கே.ரஜப் பாத்திமா அறிமுக உரையாற்றினார். தமிழ்த்துறை தலைவர் ஷப்ரீன் முனீர், கணிதவியல் துறை தலைவர் ரத்தினமாலதி, வேதியியல் துறைத்தலைவர் அனுராதா, ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி செயலர் யதீஸ்வரி சரவணபவ ப்ரியா அம்பா, கல்லூரி முதல்வர் மலர்விழி, இயக்குனர் சந்திரசேகரன், கணிதவியல் துறை இயக்குனர் முருகலிங்கம், வேதியியல் துறை தலைவர் ராஜராஜேஸ்வரி, தமிழ்த்துறை தலைவர் பார்வத கிருஷ்ணம்மாள், கணிதவியல் துறைத்தலைவர் அம்மணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# DINAMALAR 13.09.2019

தினமலர் நெல்லை
திருநெல்வேலி
● வெள்ளி ● செப்டம்பர் 13 2019
www.dinamalarnellai.com




பாளை., சாரதா கல்லூரியில் கல்வி பரிமாற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவிகள் மற்றும் பேராசிரியைகள்.

## பாளை., சாரதா கல்லூரியில் கல்வி பரிமாற்ற நிகழ்ச்சி

திருநெல்வேலி, செப். 13–

பாளை., சாரதா கல்லூரியில் கல்வி பரிமாற்ற நிகழ்ச்சி நடந்தது.

பாளை., சாரதா மகளிர் கல்லூரியும், மேலப்பாளையம், அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியும் இணைந்து பேராசிரியர்கள் மற்றும் மாணவிகளை இடம் மாற்றி கொள்வதன் மூலம் கல்விப்பரிமாற்ற நிகழ்வினை நடத்தினர்.

நிகழ்ச்சியில் சாரதா கல்லூரி செயலர் யதீஸ்வரி சரவணபவப்ரியா அம்பா, முதல்வர் மலர்விழி, இயக்குனர் சந்திரசேகரன், கணிதவியல்துறை தலைவர் இயக்குனர் முருகலிங்கம், வேதியியல் துறை தலைவர் ராஜ ராஜேஸ்வரி, தமிழ்த் துறைத்தலைவர் பார்வத கிருஷ்ணம்மாள், கணிதவியல்துறை தலைவர் அம்மணி, அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரி தலைவர் செய்யது அகமது, பொருளாளர் ஜாபர் சாதிக், தாளாளர் குதா முகமது, முதல்வர் ரஜப் பாத்திமா, தமிழ்த் துறைத்தலைவர் சப்ரீன் முனீர், கணிதவியல்துறை தலைவர் ரத்தின மாலதி, வேதியியல்துறை தலைவர் அனுராதா கலந்து கொண்டனர்.

இரு கல்லூரிகளிலும் பணியாற்றும் தமிழ்த்துறை, கணிதவியல்துறை மற்றும் வேதியியல்துறை பேராசிரியர்களும், மாணவிகளும் நிகழ்ச்சியில் துறை சார்ந்த தகவல்களை பரிமாறி கொண்டனர். இதில் 160 மாணவிகள் பங்கேற்றனர். பெண்கள் கல்லூரிகளே எனினும், வேறுபட்ட சூழ்நிலையில் அறிமுகமில்லாத நண்பர்கள் மற்றும் பேராசிரியர்களோடு கலந்து பழகும் வாய்ப்பும், பயிலும் வாய்ப்பும் கிடைக்க பெற்றதால் மாணவிகள் உற்சாகத்தோடு தெரிவித்தனர்.

DINATHANTHI 06.10.2019

# விழிப்புணர்வு முகாம்

நெல்லை, அக்.6-

மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியில் நெல்லை மாநகராட்சி மேலப்பாளையம் மண்டல அலுவலகமும், நாட்டு நலப்பணித்திட்டமும் இணைந்து தூய்மை இந்தியா விழிப்புணர்வு முகாமை நடத்தியது. கல்லூரி தலைவர் செய்யது அகமது தலைமை தாங்கினார். தாளாளர் குதா முகம்மது முன்னிலை வகித்தார். முதல்வர் ரஜப் பாத்திமா வரவேற்றார். பொருளாளர் ஜாபர் சாதிக் வாழ்த்தி பேசினார். நெல்லை மாநகர நலத்துறை அலுவலர் டாக்டர் சதீஷ்குமார் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு பேசினார். மேலப்பாளையம் மண்டல சுகாதார அலுவலர் சாகுல்அமீது, சுகாதார ஆய்வாளர் அந்தோணி ஆகியோர் பேசினர். முகாம் ஏற்பாடுகளை நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் ராமலட்சுமி செய்திருந்தார்.

# THE HINDU TAMIL 17.12.2019



▲ மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியில் மாநகர காவல்துறை சார்பில் நடைபெற்ற காவலன் செயலி விளக்க நிகழ்ச்சியில் மாநகர காவல்துறை துணை ஆணையர் ச. சரவணன் பேசினார்.

## காவலன் செயலி விழிப்புணர்வு நிகழ்ச்சி

**திருநெல்வேலி:** மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரி அரங்கத்தில் மாநகர காவல்துறை மூலம் காவலன் செயலி பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சியில் பங்கேற்று திருநெல்வேலி மாநகர காவல்துறை துணை ஆணையர் ச. சரவணன் பேசும்போது, "இந்த செயலியை எப்படி பதிவிறக்கம் செய்ய வேண்டும், எப்படி கையாள வேண்டும் என தெரிந்து கொள்ள வேண்டும். நீங்கள் அறிந்ததை உங்கள்குடும்பத்தார் மற்றும் நண்பர்களுடனும் பகிர்ந்து கொள்ளுங்கள். மூத்த குடிமக்களின் பாதுகாப்பையும் காவலன் செயலி மூலம் உறுதி செய்யலாம்.

காவலன் செயலி எப்போதும் உங்களுடன் இருக்கும் காவல்காரன் . உங்கள் படிப்பு, வேலை போன்ற லட்சியங்களை எட்ட தடையாக உள்ளதை காவல்துறை உதவியுடன் எதிர் கொள்ளுங்கள்" என்றார். நிகழ்ச்சி ஏற்பாடுகளை ஆய்வாளர் எழிலரசி உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

DINAMALAR 31.01.2020



# இலவச மருத்துவ முகாம்

நெல்லை, ஜன.31-

மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியின் நாட்டு நலப்பணி திட்டம், அகர்வால் கண் ஆஸ்பத்திரி, மேக்னம் பல் ஆஸ்பத்திரி ஆகியவை சார்பில் இலவச மருத்துவ முகாம் மேலப்பாளையம் ஹாமிம்புரம் 7-ம் தெருவிற்கு அருகே உள்ள அப்துல் காதர் மஸ்ஜித் மதரஸா வளாகத்தில் நடந்தது.

கல்லூரி தலைவர் செய்யது அகமது தலைமை தாங்கினார். தாளாளர் குதா முகம்மது முன்னிலை வகித்தார். கல்லூரி பொருளாளர் ஜாபர் சாதிக் வரவேற்றார். முதல்வர் ரஜப் பாத்திமா வாழ்த்துரை வழங்கினார். அகர்வால் கண் ஆஸ்பத்திரி டாக்டர் வானிலா, மேக்னா பல் ஆஸ்பத்திரி டாக்டர் அனிதா குழுவினர் பொதுமக்களுக்கு மருத்துவ பரிசோதனை செய்தனர். நெல்லை மஹபூபு சுபுஹானி ஆஸ்பத்திரி இதயவியல் மருத்துவர் மஹ்மூது சுலைமான், தூத்துக்குடி டாக்டர் மேகான்ஸ் நீரிழிவு சிறப்பு மைய கிளை மேலாளர் ரீகன் ஆகியோர் பேசினர். நாட்டு நலப்பணி திட்ட அலுவலர் ராமலட்சுமி நன்றி கூறினார். ஏற்பாடுகளை செஞ்சிலுவை சங்க திட்ட அலுவலர் பாத்திமா, உடற்கல்வி பேராசிரியர் அமுதா ஆகியோர் செய்திருந்தனர்.

THE HINDU 04.02.2020

## Free eye camp

A free eye and dental camp was organised at Hameempuram Abdul Kader Masjid Madrasa for the benefit of residents of Melapalayam. The camp was organised by Annai Hajira Women's College in association with Agarwal Eye Hospital, Magnum Dental Clinic and Dr. Mohan's Diabetes Centre. College president S.K. Syed Ahamed presided. Doctors Vannila, S. Anitha and Mahmood Sulaiman spoke about problems prevailing among students and public. They advised them to lead a healthy life by taking nutritious food. Principal K. Rajab Fathima, Dr. S Ramalakshmi and 50 NSS volunteers coordinated the camp.

# DINAMANI 08.02.2020

## மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா கல்லூரியில் கண்காட்சி



கண்காட்சியை பார்வையிடும் மாணவிகள்.

திருநெல்வேலி, பிப்.7: மரபும் மாற்றமும்-2020 என்ற தலைப்பில் மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரி தமிழ்த் துறை சார்பில் கண்காட்சி கல்லூரி வளாகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கண்காட்சி தொடக்க விழாவுக்கு, கல்லூரி தலைவர் எஸ்.கே.செய்யது அகமது தலைமை வகித்தார். கல்லூரித் தாளாளர் எஸ்.கே. குதா முகம்மது முன்னிலை வகித்தார். கல்லூரிப் பொருளாளர் ஓ.கே.ஜாபர் சாதிக் வாழ்த்திப் பேசினார். கல்லூரி முதல்வர் கே.ரஜப் பாத்திமா வரவேற்றார்.

கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் செ.ஷப்ரீன் முனீர் அறிமுகவுரையாற்றினார். எழுத்தாளர் இரா.நாறும்பூநாதன், மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழக மொழிப்புல முதன்மையர் மற்றும் முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.ராமசாமி ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகப் பங்கேற்றனர். தமிழ்த்துறைப் பேராசிரியர் சு.உமா நன்றி கூறினார். மரபும் மாற்றமும் - 2020 என்ற தலைப்பிலான கண்காட்சியில், லெமுரியா கண்டம், ஆதிச்சநல்லூர் மற்றும் கீழடி அகழ்வாய்வு, வேளாண்மை, தமிழ் எழுத்துகள், ஒப்பனைகள், ஆடைகள், கலைகள், மூவேந்தர்கள், நாணயங்கள், தற்காப்புக் கலைகள், விளையாட்டுகள் உள்ளிட்ட 40 தலைப்புகளில் அரங்குகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. பல்வேறு கல்லூரிகளிலிருந்தும் மாணவிகள், பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

ஏற்பாடுகளை தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் த. ராமலெட்சுமி, செ.பாத்திமா ஆகியோர் செய்திருந்தனர்.

# DINATHANTHI 10.02.2020



### மேலப்பாளையம் கல்லூரியில்

# பழமையான பொருட்கள் கண்காட்சி

நெல்லை, பிப்.10-

மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியின் தமிழ்த்துறை சார்பில் 'மரபு மாற்றமும், காட்சிப்படுத்துதல்' என்ற தலைப்பில் பழமையான பொருட்களின் கண்காட்சி நடந்தது. கல்லூரி தலைவர் செய்து அகமது தலைமை தாங்கினார். முதல்வர் ரஜப் பாத்திமா வரவேற்று பேசினார். எழுத்தாளர் நாறும்பூநாதன், பேராசிரியர் ராமசாமி ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு கண்காட்சியை தொடங்கிவைத்து பேசினர். பேராசிரியர் உமா நன்றி கூறினார். இந்த கண்காட்சியில் பழமையான பொருட்களான தானிய குதிர், முதுமக்கள் தாழி, போர்க்கருவிகள், இசைகருவிகள், சங்கு, சக்கரம் உள்ளிட்டவை இதில் இடம் பெற்று இருந்தன. இந்த கண்காட்சியில் 40 அரங்குகள் அமைக்கப்பட்டு இருந்தன. கண்காட்சியை மாணவிகள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் பார்த்து சென்றனர்.

**DINAKARAN 02.03.2020**

மேலப்பாளையம்

# அன்னை ஹாஜிரா கல்லூரி பட்டமளிப்பு விழா



▶ மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரி பட்டமளிப்பு விழாவில் மாணவிகளுக்கு முன்னாள் செயலர் தனவேல் பட்டங்கள் வழங்கினார்.

**நெல்லை, மார்ச் 2:** மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரி ஆண்டு விழா, பட்டமளிப்பு விழா ஆகிய இருபெரும்விழா நடந்தது.

ஆண்டு விழாவில் மேலப்பாளையம் உஸ்மானியா அரபிக் கல்லூரிபேராசிரியர் செய்யது முஹம்மது பாஜில் பாக்கவி கிராஅத் ஓதினார. கல்லூரி தலைவர் செய்யது அஹமது தலைமை வகித்துபேசினார். தாளாளர் குதா முகம்மது, முஹம்மது முஹைதீன், அஸ்ஸாதிக் கல்விக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் நிஜாமுத்தீன், காதர், அமானுல்லாஹ், காஜா நஜிமுத்தீன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்வி கூட்டமைப்பு பொருளாளர் ஜாபர் சாதிக் வரவேற்றார். முதல்வர் ரஜப் பாத்திமா ஆண்டறிக்கை வாசித்தார். திருச்செந்தூர் பெண்கள் கல்லூரி பேராசிரிர் ஸ்ரீமதி, நகர் ஊரமைப்புத்துறை முன்னாள் துணை இயக்குநர் முகமது அலி, உஸ்மானிய்யா அரபிக் கல்லூரி பேராசிரியர் முஹம்மது இல்யாஸ் உஸ்மானி, முஹம்மது அஸ்லம் ஆகியோர் பேசினர். பின்னர் நடந்த பட்டமளிப்பு விழாவில் தமிழக அரசின் முன்னாள் செயலாளர் தனவேல் பட்டம் வழங்கி பேசினார். 255 இளங்கலை மாணவிகளும், 7 முதுநிலை மாணவிகளும் பட்டம் பெற்றனர். தமிழ், கணினி வணிகவியல் துறைகளில் மாணவிகள் தங்கப் பதக்கம் பெற்றனர். பிறதுறைகளில் 15 மாணவிகள் தர வரிசை பட்டியலில் இடம் பெற்றனர்.

# THE HINDU TAMIL 03.03.2020

## அன்னை ஹாஜிரா கல்லூரி பட்டமளிப்பு விழா

**திருநெல்வேலி**

மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியில் 16-ம் ஆண்டு விழா மற்றும் 13-வது பட்டமளிப்பு விழா நடைபெற்றது.

ஆண்டு விழாவுக்கு கல்லூரி தாளாளர் எஸ்.கே. குதா முகம்மது முன்னிலை வகித்தார். பர்மா சென்ட்ரல் இன்டர்நேஷனல் நிறுவன நிர்வாக இயக்குநர் மு. முஹம்மது முஹைதீன், அஸ்ஸாதிக் கல்வி கூட்டமைப்பு உறுப்பினர்கள் இ.எம். நிஜாமுத்தீன், பிஎம்எச் காதர், வி.எஸ்.டி. அமானுல்லா, எஸ்.எம். காஜா நஜிமுத்தீன் முன்னிலை வகித்தனர். கூட்டமைப்பு பொருளாளர் ஜாபத் சாதிக் வரவேற்றார். தலைவர் எஸ்.கே. செய்யது அஹமது தலைமை வகித்தார். முதல்வர் கே. ரஜப் பாத்திமா ஆண்டறிக்கை வாசித்தார். திருச்செந்தூர் கோவிந்தம்மாள் ஆதித்தனார் மகளிர் கல்லூரி பேராசிரியர் சி. ஸ்ரீமதி, நகர் ஊரமைப்புத்துறை முன்னாள் துணை இயக்குநர் எஸ். பி. முகம்மது அலி, பேராசிரியர் முஹம்மது இல்யாஸ் வாழ்த்துரை வழங்கினர். அதிராமபட்டினம் காதர் முஹைதீன் கல்லூரி முன்னாள் செயலாளர் எஸ். முஹம்மது அஸ்லம் சிறப்புரை ஆற்றினார்.

பட்டமளிப்பு விழாவில் தமிழக அரசின் முன்னாள் செயலாளர் கி. தனவேல் பட்டங்களை வழங்கி உரையாற்றினார். 255 பேருக்கு இளங்கலை பட்டம், 7 பேருக்கு முதுகலை பட்டம் வழங்கப்பட்டது. சமூக கல்வி பொருளாதார மேம்பாட்டு அறக்கட்டளை தலைவர் எஸ்.எம். இதாயத்துல்லா சிறப்புரை ஆற்றினார்.



▲ மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரி பட்டமளிப்பு விழாவில் தமிழக அரசின் முன்னாள் செயலாளர் கி. தனவேல் மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார்.